சோலார் மின்சாரம்
கனரக தொழிற்சாலைகள், டையிங், நூல் மில்களுக்கு தேவையான சோலார் மின்சாரம் குறைந்த விலையில் சப்ளை செய்கிறோம்
தொடர்புக்கு
96005 48581

நல்லவே எண்ணல் வேண்டும்..,    எண்ணிய முடிதல் வேண்டும்..,

# சக்கர வியூகம்

தினசரி    "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"    புலனாய்வு நாளிதழ்
www.SAKKRAVIYUGAM.com

TAMIL PRESS CLUB
தமிழ் பிரஸ் கிளப்
Reg.No: 12/2013
தமிழ்நாடு, பாண்டிச்சேரியில் சிறப்பாக செயல்பட்டு வரும் பொது நல அமைப்பிற்கு 2026 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்க்கை அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்பம்...
ஆர்வமுள்ளவர்கள் அமைப்பாளராக இணைந்திட
88705 00000
99 44 616 559

Website: www.sakkraviyugam.com    PRGI:TNTAM/25/A1018    Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01    ISSUE: 178    22.12.2025    MONDAY    MARGAZHI : 7    PRICE : RS.5/-
மலர் : 01    இதழ் : 178    22.12.2025    திங்கள்கிழமை    மார்கழி : 7    விலை : ரூ.5/–

3 ஊரக வளர்ச்சித் துறை ஊழியர்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற ஓபிஎஸ் வலியுறுத்தல்

4 தமிழக காவல்துறை அரசின் சூழ்நிலை கைதியாக இருக்கிறது - பொன் மாணிக்கவேல்

2 செவிலியர்களை பணி நிரந்தரம் செய்யாததற்கு ஆட்சியாளர்களின் அதிகார திமிரே காரணம் - அன்புமணி

# நெல்லையில் ரூ.100 கோடியில் காயிதே மில்லத் நூலகம் அடிக்கல் நாட்டினார் முதல்வர் ஸ்டாலின்

**திருநெல்வேலி: டிச.22–**
திருநெல்வேலியில் காயிதே மில்லத் பெயரில் ரூ. 100 கோடி மதிப்பீட்டில் பிரமாண்ட நூலகம் அமைய இருப்பதாகவும், அதற்கான அடிக்கலை இன்றைக்கு நாட்டியிருப்பதாகவும் முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற அரசு விழாவில், முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பல்வேறு துறைகளின் சார்பில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை முதல்வர் மு.க. ஸ்டாலின் வழங்கினார். இதனைத் தொடர்ந்து அவர் ஆற்றிய உரை:

நெல்லையின் அடையாளமாக விளங்குகிறது நெல்லையப்பர் கோயில். ஏழாம் நூற்றாண்டில், நின்றுசீர் நெடுமாறப் பாண்டியரால் கட்டப்பட்ட இந்த கோயிலை 700 ஆண்டுகளுக்குப் பிறகு புதுப்பித்து திருப்பணிகளை செய்தவர் கருணாநிதி. நெல்லையப்பர் கோயிலின் வெள்ளித் தேர் 1991ல் தீ விபத்தில் எரிந்து போனது. கடந்த பிப்ரவரி மாதம், நான் இதே நெல்லைக்கு வந்தபோது மீண்டும் அந்த வெள்ளித் தேர் ஓடும் என்று அறிவித்தேன். மகிழ்ச்சியோடு சொல்கிறேன், இப்போது அதற்கான பணிகள் அனைத்தும் முடிவடைந்துவிட்டன. இன்னும் சில நாட்களில், அதாவது ஜனவரி மாதம் முதல் வாரத்திலிருந்து அந்த வெள்ளித் தேர் ஓடும் என்று மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழர்களான நம்முடைய பண்பாடு தனித்துவமானது, முற்போக்கானது! இந்தியத் துணைக்கண்டத்தின் நாகரிகத்தின் தொட்டிலாகவும், உச்சமாகவும் இருந்தது, நம்முடைய தமிழ்நிலம்தான்! அதற்கு பல இலக்கியச் சான்றுகள் இருக்கிறது! ஆனால், இலக்கியம் மட்டுமே ஒருபோதும் வரலாற்று சான்றாகாது! எனவே, அதை அறிவியல் ரீதியாக மெய்ப்பிக்கவும், தொல்லியல் சான்றுகளை சேகரிக்கவும் நாம் மேற்கொள்ளும் காலப் பயணம்தான் அகழாய்வுகள்!

13 ஏக்கர் நிலப்பரப்பில், 54 ஆயிரத்து 296 சதுர அடி பரப்பளவில், பொருநை அருங்காட்சி அரங்கத்தை நான் திறந்து வைத்திருக்கிறேன்! உங்களை எல்லாம் நான் கேட்க விரும்புவது, நீங்கள் எல்லோரும் குடும்பத்துடன் சென்று, இந்த அருங்காட்சியகங்களை பார்க்க வேண்டும்!

இந்த நேரத்தில், மற்றொரு விஷயத்தை நான் குறிப்பிட்டாக வேண்டும். கடந்த 2021 ஆம் ஆண்டு ஒன்றிய பட்ஜெட்டில் ஆதிச்சநல்லூர் அருங்காட்சியகம் அமைப்பதற்கு அறிவிப்பு வந்தது. அந்தப் பணிகள் இப்போது எந்த நிலையில் இருக்கிறது? இன்னும் அதற்கான பணிகள் எதுவும் தொடங்கவில்லை.

ஆனால், நாம் ஆட்சிக்குப் பொறுப்பிற்கு வந்த பிறகு தமிழ்நாடு தொல்லியல் துறை சார்பில், சிவகலை உள்ளிட் அகழாய்வுகளை மேற்கொண்டு இப்போது உலகமே திரும்பிப் பார்க்கக்கூடிய அளவிற்கு பொருநை அருங்காட்சியகத்தை உருவாக்கி இருக்கிறோம். அதனால், இந்த நேரத்தில் பிரதமர் மோடியையும், நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனையும் தமிழ்நாட்டில் கட்டியிருக்கக்கூடிய கீழடி அருங்காட்சியகத்திற்கு வந்து பார்க்கவேண்டும் என்று இந்த கூட்டத்தின் மூலமாக, நான் அன்போடு அவர்களை அழைக்கிறேன். நீங்கள் வந்து பார்த்தால்தான் தமிழினுடைய நாகரிகம் எந்த அளவுக்கு தொன்மை கொண்டிருக்கிறது என்பது தெரியும்.



இன்றைய தினம் 235 கோடியே 94 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 33 முடிவுற்ற பணிகளை நெல்லை மாவட்ட மக்களுக்காக நான் திறந்து வைத்திருக்கிறேன்! அதில், குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்றால், நெல்லை பன்னோக்கு மருத்துவமனையில், இதயம், நரம்பு, சீறுநீரகம், கல்லீரல் குறைபாடு உள்ளவர்களுக்கு சிகிச்சை வழங்க தேவையான அனைத்து நவீன கட்டமைப்புகளையும் கொண்ட மருத்துவமனை கட்டடம் முக்கியமாக இருக்கிறது!

தமிழ்ப் பெருமைக்கு பொருநை மியூசியம்! மக்கள் உயிர்காக்க மருத்துவமனை! "அப்போது நெல்லை மக்களுக்கு அறிவுப் பசிக்கு என்ன?" என்று கேட்கிறீர்களா! சென்னையில் அண்ணா நூற்றாண்டு நூலகம், மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகம், கோவையில் தந்தை பெரியார் நூலகம் மற்றும் அறிவியல் மையம், திருச்சியில் பெருந்தலைவர் காமராசர் நூலகம் எனும் வரிசையில், நெல்லையில் காயிதே மில்லத் பெயரில், 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பிரமாண்ட நூலகம் அமைய இருக்கிறது. அதற்கான அடிக்கலை இன்றைக்கு நாட்டியிருக்கிறேன்.

நெல்லையின் அடையாளமாக நெல்லையப்பர் கோயில், திருவள்ளுவர் இரட்டைப் பாலம், தாமிரபரணி இந்த வரிசையில் இனி, பொருநை அருங்காட்சியகமும், மாபெரும் அறிவுத் திருக்கோயிலாக அமையப் போகின்ற காயேதே மில்லத் நூலகமும் இருக்கும்! நெல்லைக்கு மட்டுமல்ல, அருகாமையில் இருக்கக்கூடிய தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி உள்ளிட்ட தென் மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள், இளைஞர்கள் இதனால் பெரிய அளவில் பயனடைவார்கள்!

மொத்தம் 356 கோடியே 59 இலட்சம் ரூபாய் மதிப்பில், புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி இருக்கிறேன். 45 ஆயிரத்து 477 பயனாளிகளுக்கு 101 கோடியே 49 இலட்சம் ரூபாய்க்கு நலத்திட்ட உதவிகளையும் வழங்கி இருக்கிறேன்.

16 ஆண்டுகளுக்கு முன்பே, அப்போதைய முதல்வர் கருணாநிதி, தாமிரபரணி ஆற்றின் வெள்ள உபரி நீரை வறண்ட பகுதிகளுக்குக் கொண்டு செல்ல, 369 கோடி ரூபாய் ஒதுக்கி தாமிரபரணி, கருமேனியாறு மற்றும் நம்பியாறு வெள்ள உபரி நீர்த் திட்டத்தைத் துவக்கி வைத்தார்.

2021ல் நம்முடைய திராவிட மாடல் ஆட்சி பொறுப்பேற்றவுடன் இதற்காக தனியாக அலுவலர்களை நியமித்து விரைந்து முடிக்க நான் உத்தரவிட்டேன்! தமிழ்நாட்டின் முதல் நதிநீர் இணைப்புத் திட்டமாக, வெற்றிகரமாக இது முடிக்கப்பட்டு, கடந்த பிப்ரவரி மாதம் திறந்து வைக்கப்பட்டது!. இதனால், திருநெல்வேலி மாவட்டத்தில், 14 ஆயிரத்து 85 ஹெக்டேரும், தூத்துக்குடி மாவட்டத்தில் 8 ஆயிரத்து 955 ஹெக்டேரும் என்று மொத்தம், 23 ஆயிரத்து 40 ஹெக்டேர் நிலங்கள் பாசன வசதி பெற்றது. அதேபோல், பாளையங்கோட்டை, நாங்குநேரி, இராதாபுரம், திருவைகுண்டம், திருச்செந்தூர் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் இருக்கின்ற வறண்ட பகுதிகளில், இதனால் நிலத்தடி நீர்மட்டம் உயரத் தொடங்கியிருக்கிறது, வேளாண்மைப் பணிகள் பெருகியிருக்கிறது!

நெல்லைக்கான சில அறிவிப்புகளை தற்போது வெளியிடுகிறேன். முதல் அறிவிப்பு - திருநெல்வேலி மாநகர், காந்திநகரில் அமைந்திருக்கக்கூடிய ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரியில், 16 கோடி ரூபாய் செலவில், அனைத்து வசதிகளுடன் புதிய மகளிர் தங்கும் விடுதி அமைக்கப்படும்.

இரண்டாவது அறிவிப்பு - சேரன்மாதேவி வட்டம் முக்கூடல், பாப்பாக்குடி கிராம விவசாயிகள் பயன்பெறக்கூடிய வகையில், காங்கேயன் கால்வாய் மற்றும் வெள்ளோடையை மேம்படுத்தும் பணிகள் 4 கோடியே 1 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மூன்றாவது அறிவிப்பு - நாங்குநேரி மற்றும் இராதாபுரம் வட்ட விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, 5 கோடி ரூபாய் செலவில், வள்ளியூர் பெரிய குளம் மற்றும் வள்ளியூரான் கால்வாய் ஆகியவை புனரமைக்கப்படும் என்று மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படி மக்களுக்குத் தேவையானதை பார்த்துப் பார்த்து செய்து வழங்குகின்ற மக்களாட்சியை நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம். இதற்கு அப்படியே நேர்மாறாக, மக்கள் விரோத ஆட்சியை ஒன்றிய அரசு இன்றைக்கு நடத்திக் கொண்டிருக்கிறது. இந்திய கிராமப்புறங்களின் உயிர்நாடியாக இருந்து, பல கோடி ஏழை மக்களின் வறுமையை போக்கிய மகாத்மா காந்தி நூறு நாள் வேலைத் திட்டத்தை இப்போது, பா.ஜ.க. அரசு திட்டமிட்டு முடக்கியிருக்கிறார்கள்.

மகாத்மா காந்தியடிகள் பெயரையே நீக்கி, பெரும்பாலான இந்திய மக்களுக்கு புரியாத இந்திப் பெயரை வைத்திருக்கிறார்கள். காந்தியின் பெயரை நீக்கியது மட்டுமல்ல, 100 நாள் வேலை திட்டத்தின் உண்மையான நோக்கத்தையே காலி செய்துவிட்டார்கள் - அழித்துவிட்டார்கள் அழிக்கிறார்கள்.

இந்த நிலையில், வருகின்ற 24ஆம் தேதி நூறு நாள் வேலைத்திட்டத்தை நிறுத்தியதற்கு எதிராக, நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் அமைந்திருக்கக்கூடிய மதச்சார்பற்ற கூட்டணியின் சார்பில், தமிழகம் முழுவதும் ஒன்றிய அரசிற்கு எதிராக நாம் ஒரு மிகப் பெரிய ஆர்ப்பாட்டத்தை நடத்தவேண்டும் என்று அறிவித்திருக்கிறோம்.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகையை இதுவரை 1 கோடியே 13 இலட்சம் சகோதரிகளுக்கு வழங்கிக் கொண்டிருந்தோம். இந்த மாதத்தில் இருந்து கூடுதலாக 16 இலட்சம் பேருக்கு அதிகமாக மாதம் ஆயிரம் ரூபாய் வழங்குகிறோம். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, கே.கே.எஸ்.எஸ். ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, கனிமொழி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## அலங்காநல்லூர் குறவன்குளம் ராஜகாளியம்மன் கோவில் 48 வது நாள் மண்டல பூஜை விழா

அலங்காநல்லூர், டிச.22
மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள குறவன்குளம் கிராமத்தில் ராஜவம்ச சாம்பவர் குல பெருமக்களுக்கு தனித்து புராதன பாத்தியப்பட்ட, ஸ்ரீராஜகாளியம்மன் திருக்கோவில் கும்பாபிஷேக விழாவையொட்டி 48 வது நாள் மண்டல பூஜை விழாநடைபெற்றது. கோவிலில் இரண்டு கால யாகசாலை ஹோமங்களை தொடர்ந்து யாக சாலையில் இருந்து வேத மந்திரங்கள் முழங்க கடம் புறப்பாடாகி அழகர்கோவில், ராமேஸ்வரம் உள்ளிட்ட புனித தலங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட புனித நீர் கோவிலை சுற்றி வலம் வந்து கோவில் வளாகத்தின் கருவறையில் அமைந்துள்ள சூலாயிதத்தின் மீது சிவாச்சாரியார்கள் புனித



நீரை ஊற்றி 48 வது நாள் மண்டல பூஜையை நடத்தி வைத்தனர். இதில் சுற்று வட்டார கிராமங்களை சேர்ந்த ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர். தொடர்ந்து அன்னதானம் வழங்கப்பட்டது. கும்பாபிஷேக விழா ஏற்பாடுகளை குறவன்குளம் ராஜ வம்ச சாம்பவர் குல பெருமக்கள் உறவின்முறை சங்கம் மற்றும் இளைஞர்கள் செய்திருந்தனர்.

## திசையன்விளை மாளவியா வித்யா கேந்திரம் பள்ளியில் ஏராளமான பெண்கள் கலந்து கொண்ட சப்த சக்தி சங்கமம்

திசையன்விளை டிச.21
திசையன்விளையில் நடந்த சப்த சக்தி சங்கமம் நிகழ்ச்சியில் ஏராளமான பெண்கள் கலந்து கொண்டனர்.

திசையன்விளை அருகே உள்ள அப்பு விளை மாளவியா வித்யா கேந்திரம் பள்ளியில் சப்த சக்தி சங்கமம் நிகழ்ச்சி ஓய்வு பெற்ற நீதித்துறை கண்காணிப்பாளர் ரெங்கம்மாள் தலைமையில் நடந்தது. திசையன்விளை பேரூராட்சி



கவுன்சிலர் லிவ்யா சக்திவேல் குமார், திசையன்விளை ராம பக்தா சேவாசமிதி நிர்வாகி கஸ்தூரிபாய் காமராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர் .சிறப்பு விருந்தினராக மகளிர் மற்றும் மகப்பேறு சிறப்பு மருத்துவர் டாக்டர் .சுமதி கலந்துகொண்டு பேசினார்.தென் தமிழ்நாடு ராஷ்ட்ரிய சமிதி மக்கள் தொடர்பாளர் கே. ரமாசங்கரி சிறப்புரையாற்றினார் .இந்த நிகழ்ச்சியில் ஏராளமான பெண்கள் கலந்து கொண்டனர்.

## காளிங்கராயன் கால்வாய் தூய்மையுற விழிப்புணர்வு மாரத்தான் ஆலோசனைக் கூட்டம்

மொடக்குறிச்சி, டிச.22-
டிச: 21 மொடக்குறிச்சி சோளாங்காபாளையம் தனியார் மண்டபத்தில் காலிங்கராயன் கால்வாய் நீர்வளம் நிலவலம் தூய்மையுற காளிங்கராயன் பாசன விவசாயிகள் சங்கம் சார்பாக விழிப்புணர்வு மாரத்தான் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு காலிங்கராயன் பாசன விவசாயிகள் சங்கம் தலைவர் வெந்தபாளையம்




நடராஜ், தலைமை தாங்கினார். செயலாளர் செல்வகுமார், ஒருங்கிணைப்பாளர்கள் கந்தசாமி, கோம்புபாளையம் தேவராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் புதிய சோலார் பேருந்து நிலையத்திற்கு காலிங்கராயன் பெயர் சூட்ட வேண்டும் என்றும்

காலிங்கராயன் வாய்க்கால் தூய்மை பெற வேண்டும் என்ற நோக்கத்தை வலியுறுத்தி வரும் ஜனவரி 18ஆம் தேதி விழிப்புணர்வு மாறத்தான் போட்டி கணபதிபாளையம் நால் ரோட்டில் துவங்கி நடத்துவது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. , இதில் 100 க்கும் முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டனர்.

# செவிலியர்களை பணி நிரந்தரம் செய்யாததற்கு ஆட்சியாளர்களின் அதிகார திமிரே காரணம் - அன்புமணி



சென்னை, டிச.22-

செவிலியர்களை பணி நிரந்தரம் செய்ய என்ன தடை? என்றும் அதிகாரத் திமிர், ஆணவத்தில் திமுக அரசு ஆட்டம் போடக்கூடாது என்றும் பாமக தலைவர் அன்புமணி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: தமிழக அரசின் சுகாதாரத்துறையில் கிட்டத்தட்ட 10 ஆண்டுகளாக தற்காலிக பணியாளர்களாக பணி செய்து வரும் 8 ஆயிரத்திற்கும் கூடுதலான செவிலியர்கள் தங்களுக்கு பணி நிலைப்பு வழங்க வேண்டும் என்று கடந்த 4 நாள்களாக போராட்டம் நடத்தி வரும் நிலையில் அவர்களை பணி நிலைப்பு செய்ய முடியாது என்று தமிழக அரசு அறிவித்திருப்பது ஆட்சியாளர்களின் அதிகாரத் திமிரையும், ஆணவத்தையும் தான் காட்டுகிறது.

அதுமட்டுமின்றி, செவிலியர்களை மிரட்டி பணியவைக்கப் பார்ப்பது கண்டிக்கத்தக்கதாகும். 2015ஆம் ஆண்டு முதல் இப்போது வரை மொத்தம் 14 ஆயிரம் செவிலியர்கள் ஒப்பந்த முறையில் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் மருத்துவப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் போட்டித்தேர்வு நடத்தி தான் தேர்வு செய்யப்பட்டனர்.

அவர்கள் அனைவரும் இரு ஆண்டுகளுக்குப் பிறகு பணி நிலைப்பு செய்யப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், அவர்களில் 6 ஆயிரம் பேர் மட்டுமே இதுவரை பணி நிலைப்பு செய்யப்பட்டுள்ள நிலையில், மீதமுள்ள 8,322 செவிலியர்கள் இன்னும் நிரந்தரமாக்கப்படவில்லை. இது மிகப்பெரிய சமூக அநீதியாகும். இதை எதிர்த்து பல ஆண்டுகளாக அவர்கள் போராடி வருகின்றனர்.

கிட்டத்தட்ட 10 ஆண்டுகளாக ஒப்பந்த செவிலியர்களாக பணியாற்றி வரும் அவர்கள் பணி நிலைப்புக் கோரி கடந்த 18ஆம் தேதி முதல் போராட்டம் நடத்தி வருகின்றனர். அவர்களின் கோரிக்கையை ஏற்க மறுக்கும் திமுக அரசு, அவர்கள் மீது அடக்குமுறைகளை கட்டவிழ்த்து விட்டு வருகிறது. மேலும் பேச்சு நடத்த அழைக்கப்பட்ட தங்களிடம், ''தேர்தல் வாக்குறுதி கொடுத்தா நிறைவேத்தணுமா? இது அரசோட கொள்கை முடிவு அவ்வளவுதான்.

நானே பார்க்குறேன் நிறைய இடங்கள்ல தேவைக்கும் அதிகமா வேலையே செய்யாம ஆட்கள் இருக்காங்க. தேர்தல் நேரத்துல போராட்டம் பண்ணி நெருக்கடி கொடுக்க பார்க்குறீங்களா? என்ன பண்ணுவீங்க? போராடுவிங்க.... போராடிக்கோங்க'' என்று சுகாதாரத் துறை அமைச்சர் மிரட்டியதாக செவிலியர் சங்க நிர்வாகிகள் குற்றஞ்சாட்டி உள்ளனர். இந்த அணுகுமுறையை ஏற்கவே முடியாது.

அதுமட்டுமின்றி, ஒப்பந்த செவிலியர்கள் அனைவரும் ஜெயலலிதா ஆட்சிக்காலத்தில் நியமிக்கப்பட்டவர்கள் என்றும், காலியிடங்களே இல்லாத நிலையில் அவர்களை பணி நிலைப்பு செய்யவே முடியாது என்றும் சுகாதாரத்துறை அமைச்சர் கூறியுள்ளார். அமைச்சரின் இந்த விளக்கம் மிகவும் விநோதமாக இருக்கிறது.

அரசு மருத்துவமனைகளுக்கு வரும் நோயாளிகளின் எண்ணிக்கைக்கு இணையாக புதிய செவிலியர் பணியிடங்களை திமுக அரசு ஏற்படுத்தவில்லை என்பது ஒருபுறமிருக்க, காலியிடங்களே இல்லை என்பது அப்பட்டமான பொய்.

நிரந்தரப் பணியாளர்களைக் கொண்டு நிரப்பப்படாத அனைத்து பணியிடங்களும் காலியிடங்கள் தான். அந்த வகையில் ஒப்பந்த செவிலியர்கள் பணியாற்றும் 8322 பணியிடங்களும் காலி இடங்கள் தான். அந்த இடங்களில் ஒப்பந்த செவிலியர்களை நிரந்தர செவிலியர்களாக நியமிக்க எந்தத் தடையும் இல்லை. அவ்வாறு செய்ய ஆட்சியாளர்களுக்கு மனம் இல்லாதது தான் ஒரே ஒரு தடை ஆகும்.

நிரந்தர செவிலியர்கள் எவ்வாறு நியமிக்கப்படுவார்களோ, அதே முறையை பின்பற்றி தான் ஒப்பந்த செவிலியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் நியமனத்தில் போட்டித் தேர்வு, இட ஒதுக்கீடு உள் ளிட்ட அனைத்து நடைமுறைகளும் பின்பற் றப்பட்டுள்ளன. அத்தகைய சூழலில் அவர்கள் அனைவரையும் ஒரே ஓர் அரசாணையின் மூலம் பணி நிலைப்பு செய்ய முடியும்.

அவ்வாறு செய்தால் அதை உச்சநீதிமன்றம் கூட கேள்வி கேட்க முடியாது. ஆனால், வாய்கிழிய சமூகநீதி பேசும் திமுக அரசுக்கு அதை செயல்படுத்துவதற்கு மட்டும் மனம் வராது. சமூகநீதி என்றாலே மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசுக்கு வேப்பங்காயாக கசக்கிறது.

ஒப்பந்த முறையில் பணியாற்றும் செவிலியர்களும் நிரந்தர செவிலியர்கள் செய்யும் அதே பணியைத் தான் செய்கின்றனர். அதனால், தங்களுக்கும் சம ஊதியம் வேண்டும் என்று கோரி உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளனர். உயர்நீதிமன்றமும் அதை ஏற்று சம ஊதியம் வழங்க ஆணையிட்டது. ஆனால், அதை செய்ய மறுத்து விட்ட திமுக அரசு உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது. அந்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றத்தின் இரு நீதிபதிகள் கொண்ட அமர்வு, தமிழக அரசின் அணுகுமுறையை கடுமையாக விமர்சித்தது.

'செவிலியர்களிடம் அளவுக்கு அதிகமாக உழைப்பு சுரண்டல் செய்கிறீர்கள். ஒப்பந்த செவிலியர்கள் நிரந்தர செவிலியர்களாக நியமிக்கவும் மறுக்கிறீர்கள். அவர்களுக்கு சம ஊதியம் வழங்கவும் மறுக்கிறீர்கள். மத்திய அரசு பணம் தரவில்லை என்று கூறாதீர்கள். எதற்கெடுத்தாலும் மத்திய அரசை குறை சொல்லிக் கொண்டே இருக்காதீர்கள். நீங்கள் ஏன் ஒரு தனித்திட்டத்தை தொடங்கக்கூடாது? உங்களது ஊழியர்களுக்கு ஊதியம் கொடுக்க வேண்டியது உங்கள் பொறுப்பு தானே? அதை நீங்கள் எக்காரணத்தைக் கொண்டும் தட்டிக் கழிக்க முடியாது.

இலவசங்களை கொடுக்க பணம் இருக்கிறது. ஒரு சட்டமன்றத் தேர்தலுக்கு எவ்வளவு பணம் செலவழிக்கிறீர்கள்? ஆனால் செவிலியர்களுக்கு கொடுக்க பணம் இல்லையா?'' என்று கடந்த செப்டம்பர் 15 ஆம் தேதி கண்டனம் தெரிவித்தது. அதற்குப் பிறகாவது செவிலியர்களுக்கு பணி நிலைப்பும், சம ஊதியமும் வழங்க வேண்டும் என்று செப்டம்பர் 16 ஆம் தேதி வலியுறுத்தினேன். ஆனால், சமூகநீதியில் அக்கறை இல்லாத திமுக அரசு, செவிலியர்களுக்கு நீதி வழங்க மறுத்துவிட்டது.

இப்போது ஒப்பந்த செவிலியர்கள் எவ்வாறு நியமிக்கப்பட்டார்களோ, அதேபோல் தான் கடந்த 2004 ஆம் ஆண்டு ஜெயலலிதா ஆட்சிக்காலத்தில் 45 ஆயிரம் ஆசிரியர்கள் தொகுப்பூதிய அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டனர். 2006 ஆம் ஆண்டில் பா.ம.க. ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த கருணாநிதி, 01.06.2006 முதல் அவர்கள் அனைவரையும் பணி நிலைப்பு செய்தார். அதேபோல் இப்போது செய்ய எந்தத் தடையும் இல்லை.

ஆனால், அதிகாரம் தந்த போதை, ஆணவம், அதிகாரத் திமிர் ஆகியவை தலைக்கு ஏறி ஆட்டம் போடும் ஆட்சியாளர்களுக்கு சமூகநீதி குறித்து சிந்தித்துக் கூட பார்க்க முடியவில்லை. ஆட்சியாளர்களின் தலையில் ஏறிய அனைத்தும் இறங்கும் வகையில் அதிரடியான தீர்ப்பை வரும் தேர்தலில் மக்கள் வழங்குவார்கள். அதன்பின் அமையும் ஆட்சியில் ஒப்பந்த செவிலியர்கள் அனைவரும் பணி நிலைப்பு செய்யப்படுவார்கள். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.





## கொடைக்கானலில் பனியின் தாக்கம் அதிகரிப்பு: பிரையன்ட் பூங்காவில் மலர் செடிகளை பாதுகாக்க நிழல் வலை

**கொடைக்கானல், டிச.22–**

கொடைக்கானலில் பனியின் தாக்கம் நாள்தோறும் அதிகரித்து வரும் நிலையில், பிரையன்ட் பூங்காவில் மலர் செடிகளை பனி பாதிக்காமல் இருக்க, நிழல் வலைகளை தோட்டக்கலைத் துறையினர் அமைத்து வருகின்றனர்.

கொடைக்கானலில் வழக்கமாக டிசம்பர் முதல் பிப்ரவரி மாதம் வரை உறை பனிக்காலமாக இருக்கும். நடப்பாண்டில் நவம்பர், டிசம்பர் மாதங்களில் பரவலாக மழை பெய்தததால் உறை பனி குறைந்து, அடர்பனி மூட்டம் நிலவியது.

இந்நிலையில், கடந்த சில நாட்களாக பகல் மற்றும் இரவில் வெப்ப நிலை குறைந்து கடும்குளிர் நிலவி வருகிறது. இரவு முதல் அதிகாலை வரை குறைந்தபட்சம் 5 டிகிரி முதல் 7 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையும், பகலில் அதிகபட்சமாக 12 முதல் 16 டிகிரி செல்சியஸ் வெப்ப நிலையும் நிலவுகிறது.

தினமும் அதிகரித்து வரும் பனிப்பொழிவால் கொடைக்கானல் காஷ்மீர் போல காட்சியளிக்கிறது. இதனால், உள்ளூர் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. பனியின் தாக்கத்தால் பயிர்களும் கருகி வருவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

இதனிடையே, 2026 ம் ஆண்டு மே மாதம் கொடைக்கானல் பிரையன்ட் பூங்காவில் நடக்கவுள்ள 63வது மலர்க் கண்காட்சிக்காக, தோட்டக்கலைத் துறை மூலம் முதல்கட்டமாக டிச.12ல் சால்வியா, பிங்க் அஸ்டர், டெல்பினியம், லில்லியம் உள்ளிட்ட ஒரு லட்சம் மலர்ச் செடிகள் நடவுசெய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில், உறை பனியின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், நடவு செய்த மலர்ச் செடிகளைப் பாதுகாக்க தோட்டக்கலைத் துறை ஊழியர்கள் பிளாஸ்டிக் மற்றும் துணியால் ஆன நிழல் வலைகளைப் போர்த்திப் பாதுகாக்கத் தொடங்கியுள்ளனர். இதனால், பூங்கா முழுவதும் வெள்ளை மற்றும் பச்சைக் கம்பளம் போர்த்தியதுபோல் காட்சியளிக்கிறது.

இதுகுறித்து தோட்டக்கலை அதிகாரிகள் கூறுகையில், 'கடந்த சில தினங்களாக பனியின் தாக்கம் அதிகரித்து வருகிறது. இதில் மலர் கண்காட்சிக்காக நடவு செய்துள்ள செடிகள் பாதிக்காமல் இருக்க, மாலையில் நிழல் வலைகளால் செடிகளை மூடி பாதுகாக்கிறோம். மறுநாள் காலையில் பனியின் தாக்கம் குறைந்து வெயில் வரத் தொடங்கியதும் நிழல் வலையை அகற்றி விடுவோம்' என்றனர்.

## டிச 29ல் சேலத்தில் சிறப்பு செயற்குழு, பொதுக்குழு கூட்டம்: ராமதாஸ் அழைப்பு

சென்னை, டிச.22-

புத்தாண்டு மாநில சிறப்பு செயற்குழு கூட்டமும், மாநில சிறப்பு பொதுக்குழு கூட்டமும் வருகின்ற டிச 29ம் தேதி சேலத்தில் நடைபெறும் என பாமக நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது அறிக்கையில், பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் 2025க்கு விடை கொடுப்போம், 2026 ஐ வரவேற்போம். புத்தாண்டு மாநில சிறப்பு செயற்குழு கூட்டமும் மாநில சிறப்பு பொதுக்குழு கூட்டமும் வருகின்ற 29.12.2025 திங்கட்கிழமை சேலம் 5 ரோடு ரத்தினவேல் ஜெயக்குமார் திருமண அரங்கில் நடைபெற உள்ளது.

புத்தாண்டு சிறப்பு நிகழ்ச்சியில் பா.ம.க, வ.ச, ச.மு.ச உள்ளிட்ட அனைத்து அமைப்புகளின் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், மாநகரப் பகுதி நிர்வாகிகள், மாநில செயற்குழு உறுப்பினர்கள், மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அவசியம் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென தெரிவித்துக்கொள்கிறேன்.

கட்சி வளர்ச்சி மற்றும் செயல்பாடுகள் குறித்தும் 2026 சட்டமன்றத் தேர்தல் குறித்தும் ஆலோசிக்கப்படும். மாநில செயற்குழு கூட்டம் 29.12.2025 காலை 10.00 முதல் 11.30 மணி வரை நடைபெறும். அதனைத் தொடர்ந்து மாநில பொதுக்குழு கூட்டம் 11.40 மணி முதல் நடைபெறும். இதனையே அழைப்பாக ஏற்று பங்கேற்க அழைக்கின்றேன். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## மாமல்லபுரத்தில் தவெக சார்பில் கிறிஸ்துமஸ் விழாவுக்கு ஏற்பாடு - விஜய் பங்கேற்கிறார்



சென்னை, டிச.22-

மாமல்லபுரத்தில் உள்ள ஓட்டலில் தவெக சார்பில் கிறிஸ்துமஸ் விழா நடத்த ஏற்பாடுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதில் கட்சித் தலைவர் விஜய் பங்கேற்க உள்ளார். இந்த விழா நாளை நடைபெறும் என்று கூறப்படுகிறது. கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் காரணமாக, தீபாவளி பண்டிகை கொண்டாட்டங்களை கட்சியினர் தவிர்த்தனர்.

இந்த நிலையில், கிறஸ்துமஸ் விழாவை விமரிசையாக கொண்டாட திட்டமிட்டுள்ளனர். இதில் செங்கோட்டையன், புஸ்ஸி ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, அருண்ராஜ் உள்ளிட்டோரும் பங்கேற்க உள்ளனர்.

இதற்கிடையே, கூட்டணி பேச்சுவார்த்தை குழு அமைப்பது தொடர்பாக செங்கோட்டையன் உள்ளிட்ட தவெக நிர்வாகிகளுடன் விஜய், சென்னை பட்டினப்பாக்கத்தில் உள்ள தனது வீட்டில் நேற்று ஆலோசனை நடத்தினார்.

## கிறிஸ்துமஸ்: சென்னை மங்களூரு ரயில் உள்பட 4 சிறப்பு ரயில்கள் அறிவிப்பு




**சென்னை, டிச.22–**

கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு, சொந்த ஊர்களுக்குச் செல்வோர் வசதிக்காக, சென்னை மங்களூர் ரயில், ஈரோடு நாகர்கோவில் ரயில் உள்பட 4 சிறப்பு ரயில்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அதன்விவரம் வருமாறு: மங்களூரு சந்திப்பில் இருந்து டிச.23, 30 ஆகிய தேதிகளில் அதிகாலை 3.10 மணிக்கு சிறப்பு ரயில் (06126) புறப்பட்டு, அதேநாள் இரவு 11.30 மணிக்கு சென்னை சென்ட்ரலை வந்தடையும். மறுமார்க்கமாக, சென்னை சென்ட்ரலில் இருந்து டிச.24, 31 ஆகிய தேதிகளில் அதிகாலை 4.15 மணிக்கு சிறப்பு ரயில் (06125) புறப்பட்டு, அதேநாள் இரவு 11.30 மணிக்கு மங்களூர் சந்திப்பை சென்றடையும்.

ஈரோடு நாகர்கோவில் (வழி: அரக்கோணம், எழும்பூர்): ஈரோட்டில் இருந்து டிச.23, 30 ஆகிய தேதிகளில் மாலை 4 மணிக்கு சிறப்பு ரயில் (06025) புறப்பட்டு, மறுநாள் மதியம் 1.15 மணிக்கு நாகர்கோவில் சந்திப்பை அடையும். மறுமார்க்கமாக, நாகர்கோவிலில் இருந்து டிச.24, 31 ஆகிய தேதிகளில் இரவு 11 மணிக்கு சிறப்பு ரயில் (06026) புறப்பட்டு, மறுநாள் இரவு 8.30 மணிக்கு ஈரோட்டை அடையும்.

இந்த ரயில் ஈரோட்டில் இருந்து புறப்பட்டு சேலம், ஜோலார்பேட்டை, காட்பாடி, அரக்கோணம், திருவள்ளூர், பெரம்பூர், சென்னை எழும்பூர், தாம்பரம், செங்கல்பட்டு, விழுப்புரம், விருத்தாசலம், திருச்சி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், சாத்தூர், கோவில்பட்டி, நான்குநேரி, வள்ளியூர் வழியாக நாகர்கோவில் சந்திப்பை அடையும்.

செகந்திராபாத் வேளாங்கண்ணி (வழி: சென்னை எழும்பூர்): செகந்திராபாத்தில் இருந்து டிச.23ம் தேதி இரவு 7.25 மணிக்கு சிறப்பு ரயில் (07407) புறப்பட்டு, சென்னை எழும்பூர் வழியாக மறுநாள் மாலை 5.30 மணிக்கு வேளாங்கண்ணியை அடையும். மறுமார்க்கமாக, வேளாங்கண்ணியில் இருந்து டிச.25ம் தேதி காலை 8 மணிக்கு சிறப்பு ரயில் (07408) புறப்பட்டு, மறுநாள் காலை 6.10 மணிக்கு செகந்திரபாத்தை அடையும். இதுதவிர, எஸ்எம்விடி பெங்களூரு கொல்லம் இடையே சிறப்பு ரயில் இயக்கப்பட உள்ளது.

3 சிறப்பு ரயில்களுக்கான டிக்கெட் முன்பதிவு தொடங்கி விட்டது. எஸ்எம்விடி பெங்களூரு கொல்லம் இடையே சிறப்பு ரயிலுக்கான டிக்கெட் முன்பதிவு திங்கள்கிழமை (டிச.22) காலை 8 மணிக்கு தொடங்குகிறது. இத்தகவல் தெற்கு ரயில்வே செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சென்னை: மூத்த குடிமக்களுக்கான இலவச பேருந்து பயண டோக்கன் ஜன.31 வரை வழங்கப்படும்

**சென்னை, டிச.22–**

மூத்த குடிமக்கள் கட்டணமில்லா பயண டோக்கன் ஜன.31ம் தேதி வரை வழங்கப்படும் என சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து வெளியிடப்பட்ட அறிக்கை: மாநகர் போக்குவரத்துக் கழகத்தில் சென்னையைச் சார்ந்த மூத்த குடிமக்களுக்கான ஜனவரி 2026 முதல் ஜூன் 2026 வரை பயன்படுத்தக்கூடிய ஒரு மாதத்துக்கு 10 டோக்கன்கள் வீதம் 6 மாதத்துக்கான கட்டணமில்லா பேருந்து பயண டோக்கன்கள் வழங்குதல் மற்றும் அடையாள அட்டை புதுப்பித்தல், புதிய பயனாளிகளுக்கு வழங்குதல் ஆகியவை 42 மையங்களில் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

2026 ஜன.31ம் தேதி வரை தொடர்ந்து காலை 8 மணி முதல் இரவு 7.30 வரை வழங்கப்படும். அதன் பின்னர், இவை வழக்கம்போல் அந்தந்த பணிமனை அலுவலகத்தில், அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் வழங்கப்படும்.

சென்னையை சார்ந்த மூத்த குடிமக்கள் இத்தகைய கட்டணமில்லா பயண டோக்கன்கள் மற்றும் அடையாள அட்டைகள் புதிதாக பெற இருப்பிட சான்றாக குடும்ப அட்டை, வயது சான்று (ஆதார் அட்டை, ஓட்டுநர் உரிமம், கல்வி சான்றிதழ், வாக்காளர் அடையாள அட்டை) மற்றும் 2 வண்ண புகைப்படங்கள் சமர்ப்பிக்க வேண்டும்.ஏற்கெனவே இத்திட்டத்தின் மூலம் பயன்பெற்று தற்போது புதுப்பிக்க வரும் மூத்த குடிமக்கள், தங்கள் அடையாள அட்டையுடன் தங்களின் தற்போதைய பாஸ்போர்ட் அளவு புகைப்படம் சமர்ப்பிக்க வேண்டும்.

அடையாறு, பெசன்ட் நகர், திருவான்மியூர், பட்டினப்பாக்கம், தி.நகர், சைதாப்பேட்டை, மத்திய பணிமனை, சென்டரல் ரயில் நிலையம், பிராட்வே, குரோம்பேட்டை, பல்லாவரம், ஆலந்தூர், கிண்டி எஸ்டேட், ஐயப்பன் தாங்கல், வடபழனி, கே.கே.நகர், ஆதம்பாக்கம், வேளச்சேரி, அண்ணாநகர், கோயம்பேடு, அம்பத்தூர் எஸ்டேட், அம்பத்தூர் ஓ.டி, ஆவடி, அயனாவரம், ஐசிஎஃப், தண்டையார்பேட்டை;

சுங்கச்சாவடி, எண்ணூர், வியாசர்பாடி, எம்.கே.பி.நகர், மாதவரம், பாடியநல்லூர், செங்குன்றம், தாம்பரம் மெப்ஸ் பே.நிலையம், பூந்தமல்லி, பெரம்பூர் பே.நிலையம், வள்ளலார் நகர், செம்மஞ்சேரி, திருவொற்றியூர், கிளாம்பாக்கம், குன்றத்தூர் ஆகிய 42 மையங்களில் மூத்த குடிமக்களுக்கான கட்டணமில்லா பேருந்து பயண டோக்கன்கள் வழங்கப்படும்.

## கிறிஸ்துமஸ் விழாவில் பங்கேற்கும் முதல்வர் தை பூச விழாவில் பங்கேற்பாரா? வானதி சீனிவாசன்



கோவை, டிச.22-

கிறிஸ்துமஸ் விழாவில் பங்கேற்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின், தைப்பூச விழாவில் பங்கேற்பாரா என பாஜக தேசிய மகளிர் அணி தலைவர் வானதி சீனிவாசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டையில் டிச. 20ஆம் தேதி கிறிஸ்துமஸ் விழாவில் கலந்து கொண்ட முதல்வர் மு.க.ஸ்டாலின், 'எந்த மதங்கள் சார்ந்தும், எந்த பாகுபாடும் இல்லாமல் கோரிக்கைகளை நிறைவேற்றுகிறோம். திருப்பணி செய்கிறோம். இது சிலரின் கண்களை உறுத்துகிறது. தமிழ்நாட்டின் அமைதியை எப்படி சீர்குலைக்கலாம் என்று பலர் யோசிக்கிறார்கள்' என கூறியுள்ளார்.

மதங்களுக்கு இடையே பாகுபாடு பார்ப்பதும், மத உணர்வுகளைத் தூண்டி வாக்கு அறுவடை செய்வதும் திமுக என்பது தான் கடந்த கால வரலாறு. கிறிஸ்துமஸ் விழாவில் பங்கேற்கும் முதல்வர் ஸ்டாலினை பாராட்டுகிறோம். ஆனால், அவர் தீபாவளி, விநாயகர் சதுர்த்தி, தைப்பூசம் போன்ற இந்துக்களின் பண்டிகைகளில் பங்கேற்பதில்லை. குறைந்தபட்சம் இந்து பண்டிகைகளுக்கு வாழ்த்து கூட கூறுவதில்லை. இது குறித்து சட்டப்பேரவையில் பேச முயன்றால், சபாநாயகர் அப்பாவு அனுமதிப்பதில்லை. இந்நடவடிக்கை மதங்களுக்கு இடையிலான பாகுபாடு இல்லையா? வரும் பிப்ரவரி 1ம் தேதி தமிழ்க் கடவுள் எனப் போற்றப்படும் முருகப் பெருமானின் தைப்பூசம் வருகிறது. அந்த விழாவில் பங்கேற்க முதல்வர் ஸ்டாலின் தயாரா?

இந்து கோயில்களுக்கு திருப்பணி செய்வது திமுகவோ, திமுக அரசோ அல்ல. இந்துக்களின் காணிக்கையில், நன்கொடையில் தான் திருப்பணிகள் நடக்கின்றன.

திருப்பரங்குன்றம் தீபத் தூணில் தீபம் ஏற்ற உயர் நீதிமன்றம் உத்தரவிட்டும், அதை செயல்படுத்தாமல் அராஜகத்தில் ஈடுபட்டது திமுக அரசு. தமிழ்நாட்டின் அமைதியை சீர்குலைக்க நினைப்பது திமுக அரசு தான். கிறிஸ்துமஸ் விழாவில் இயேசு கிறிஸ்துவின் அன்பை, அவரது போதனைகளை பேசாமல், மத மோதலை ஏற்படுத்தும் வகையில் முதல்வர் பேசியிருப்பது கடும் கண்டனத்திற்குரியது. இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




## ஓசூரில் விமான நிலையம் அமைக்கும் திட்டத்துக்கு எதிர்ப்பு: முதல்வரை சந்திக்க 12 கிராம விவசாயிகள் முடிவு

ஓசூர், டிச.22-

ஓசூர் சூளகிரி வட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் சர்வதேச விமான நிலையம் அமைக்கும் திட்டத்தைக் கைவிடக்கோரி, முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்திக்க 12 கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் முடிவு செய்துள்ளனர்.

தொழில் நகரான ஓசூரில் குண்டூசி ஊசி முதல் விமானத்தின் உதிரிப் பாகங்கள் வரை உற்பத்தி செய்யப்படுகிறது. இங்கு உற்பத்தியாகும் பொருட்கள் வெளி மாநிலம், வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதியாகிறது. ஓசூர் நகரின் தரை வழிப் போக்குவரத்து உள்ள நிலையில் வான் வழிப் போக்குவரத்துக்கு பெங்களூருவை நம்பியுள்ள நிலையில், தொழில் வளர்ச்சியை கருத்தில் கொண்டு ஓசூரில் சர்வதேச விமான நிலையம் அமைக்கப்படும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்தாண்டு அறிவித்தார்.

தொடர்ந்து, தமிழக தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) ஓசூரைச் சுற்றியுள்ள 5 இடங்களை தேர்வு செய்து இந்திய விமான நிலையம் ஆணையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இத்திட்டத்தை நிறைவேற்ற 2 இடங்கள் சாத்தியம் என இந்திய விமான நிலையம் ஆணையம் பதிலளித்தது.

இதையடுத்து, தமிழக தொழில் வளர்ச்சி நிறுவனம் சிறப்பு ஆலோசகரை நியமித்து 2 இடங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. ஆய்வின்படி சூளகிரி வட்டத்துக்கு உட்பட்ட வெங்கடேஷ்புரம், மிடுதேப்பள்ளி, ஓசூர் வட்டத்துக்கு உட்பட்ட அரவனப்பள்ளி, முத்தாலி, அளேந்தம், பலவனப்பள்ளி, ஆத்தூர், காருப்பள்ளி, தாசனப்பள்ளி, நந்திமங்கலம், சூடகொண்டப்பள்ளி உள்ளிட்ட 12 கிராமங்களில் 2,980 ஏக்கர் நிலத்தில் விமான நிலையம் அமைக்க முடிவு செய்து இந்திய விமான நிலைய ஆணையத்தின் அனுமதிக்காக காத்திருக்கிறது.

மேலும், இத்திட்டத்துக்காக 12 கிராமங்களில் கையகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ள ஈர நிலம் (விவசாய நிலம்), வறண்ட நிலம், அரசு புறம்போக்கு நிலம் ஆகியவற்றின் சர்வே எண்ணுடன் அரசின் நிர்வாக அனுமதியை பெற்றுத்தரக் கோரி கடந்த செப்டம்பரில் மாவட்ட ஆட்சியருக்கு, தமிழக தொழில் வளர்ச்சி நிறுவனம் கடிதம் அனுப்பியுள்ளது. இத்தகவல் அறிந்த 12 கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் மற்றும் கிராம மக்கள் இத்திட்டத்தை கைவிட வலியுறுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், ஓசூர் அருகே நந்திமங்கலத்தில் நேற்று 12 கிராம விவசாயிகள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் விமான நிலையம் அமைக்கும் திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து, விவசாயிகள் கூட்டமைப்பு உருவாக்க வேண்டும். முதல்கட்டமாக முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து திட்டத்தை கைவிட வலியுறுத்துவது, கோரிக்கை ஏற்கவில்லை எனில் தொடர் போராட்டங்களில் ஈடுபடுவது, போராட்டத்துக்கு அரசியல் கட்சிகள், இயற்கை ஆர்வலர்களின் ஆதரவு கோருவது என முடிவு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் அதிமுக முன்னாள் அமைச்சர் பாலகிருஷ்ண ரெட்டி, பாஜக நிர்வாகியும், முன்னாள் எம்பியுமான நரசிம்மன், பாமகவைச் சேர்ந்த முன்னாள் எம்எல்ஏ வேலுசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டு தங்கள் ஆதரவை தெரிவித்தனர்.

இதுதொடர்பாக விவசாயிகள் கூறும்போது, “ஓசூர் பகுதிகளில் தொழிற்சாலைகள், சாலைகள் அமைக்க 25,000 ஏக்கர் விளை நிலங்கள் எடுக்கப்பட்டுள்ளது. 5வது சிப்காட் அமைக்க விளை நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது விமான நிலையம் அமைக்க நிலம் கையகப்படுத்தப்பட்டால், 12 கிராமங்கள் பாதிக்கப்படும். விமானம் நிலையத்தால் விவசாயிகளுக்கு எந்த பயனும் இல்லை. எனவே, அரசு இத்திட்டத்தை மறுபரிசீலனை செய்து வேறு இடத்தை தேர்வு செய்ய வேண்டும்” என்றனர்.

இதுதொடர்பாக சிறு, குறு தொழில்முனைவோர் கூறும் போது, “ஓசூரில் சர்வதேச விமான நிலையம் அமைந்தால் 5 ஆண்டுகளில் பெங்களூருவை போல, ஓசூர் நகரம் அபார வளர்ச்சி அடையும்” என்றனர்

இதுதொடர்பாக வருவாய்த்துறை அதிகாரிகள் கூறும் போது, “ஓசூர் மற்றும் சூளகிரி இடையே 800 ஏக்கரில் அரசு புறம்போக்கு நிலம் உள்ளது. கிராமங்கள் மற்றும் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படாமல் நிலத்தை கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்” என்றனர்.

## ஊரக வளர்ச்சித் துறை ஊழியர்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற ஓபிஎஸ் வலியுறுத்தல்

சென்னை, டிச.22-

ஊரக வளர்ச்சியின் அவசியத்தையும், ஊரக வளர்ச்சித் துறை ஊழியர்களின் நலனையும் கருத்தில் கொண்டு அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்ற தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என முன்னாள் முதல்வர் ஓபிஎஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் தனது அறிக்கையில், “தமிழ்நாட்டின் உயிர் நாடியாக விளங்குவது ஊரகப் பகுதிகள் என்று சொன்னால் அது மிகையாகாது. பல்லாயிரக் கணக்கான கிராமங்களை கொண்டுள்ள தமிழ்நாடு, முன்னேற வேண்டுமானால் அங்கே மருத்துவ வசதி, குடிநீர் வசதி, கல்வி வசதி, வேளாண் வசதி போன்றவை ஏற்படுத்தித் தரப்பட வேண்டும்.

அப்படி செய்தால்தான் கிராமப்புறங்களில் தொழில்கள் அதிகமாக வளர்ந்து, பிழைப்புக்காக மக்கள் நகரங்களை நோக்கிச் செல்லும் நிலை குறையும். ஆனால், இதற்கு முற்றிலும் முரணான நிலை தமிழ்நாட்டில் நிலவு நிலவுகிறது. ஊரகப் பகுதிகளின் வளர்ச்சிக்காக பாடுபடும் ஊழியர்களின் வாழ்வாதாரமே கேள்விக்குறியாகி ஊரக வளர்ச்சித் துறை என்பது ஊரக வீழ்ச்சித் துறையாக மாறிக் கொண்டிருக்கிறது.



கிராமப்புற ஊராட்சிகளில் பணிபுரியும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர், தூய்மைக் காவலர், சுகாதார உதவியாளர் உள்ளிட்ட அடிப்படை பணிகளை மேற்கொள்பவர்களுக்கு மாதம் இரண்டாயிரம் ரூபாய் முதல் ஐந்தாயிரம் ரூபாய் வரை தொகுப்பூதியம் மட்டுமே வழங்கப்படுவதாகவும், அவர்களுடைய ஊதியத்தை குறைந்தபட்சம் பத்தாயிரம் ரூபாயாக உயர்த்தித் தர வேண்டுமென்ற கோரிக்கை கடந்த நான்கு ஆண்டுகளாக வலியுறுத்தப்பட்டு வந்தாலும் இதை திமுக அரசு கண்டு கொள்ளவில்லை என்றும், ஊரகச் செயலாளர் பதவியில் இருப்பவர்களுக்கு தேர்வு நிலை, சிறப்பு நிலை போன்றவை நிர்ணயிக்கப்படாததன் காரணமாக புதிதாக பணியில் சேர்ந்தவர்களும், பல ஆண்டுகளாக பணிபுரிபவர்களும் ஒரே ஊதியத்தை பெறும் அவல நிலை நீடிப்பதாகவும், காலிப் பணியிடங்கள் நிரப்பப்படாததன் காரணமாக ஊரக வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து, தங்களது 12 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு ஊரக வளர்ச்சி துறை அனைத்து சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் சென்னையில் நேற்று பேரணி நடத்தப்பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சித் துறை ஊழியர்களின் கோரிக்கைகள் அளிக்கப்பட்டுள்ளது. இதன்மீது திமுக அரசு நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் அதிகாரிகளிடம் அடுத்தகட்ட போராட்டம் துவங்கும் என்று கூட்டமைப்பு சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலான கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டதாக திமுக அரசு தொடர்ந்து தெரிவித்து வந்தாலும், அரசு ஊழியர்கள், போக்குவரத்துக் கழக ஊழியர்கள், சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஊழியர்கள், மின்சார வாரிய ஊழியர்கள், பல்கலைக்கழகங்களில் பணிபுரியும் பணியாளர்கள், அரசு மருத்துவர்கள், செவிலியர்கள், தொழில்நுட்பப் பணியாளர்கள், இடைநிலை ஆசிரியர்கள், பொதுத் துறை நிறுவனங்களில் பணியாற்றுபவர்கள், தூய்மைப் பணியாளர்கள் என அனைத்துத் தரப்பினரும் அன்றாடம் போராட்டம் நடத்துவதைப் பார்க்கும்போது பெரும்பாலான கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை என்பது தெளிவாகிறது.

மொத்தத்தில், கடந்த 55 மாத கால ஆட்சியில் அனைத்துத் தரப்பு மக்களும் ஆற்றொணாத் துயரத்திற்கு ஆளாக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதுதான் கள யதார்த்தம் திமுக அரசின் இந்த மக்கள் விரோதப் போக்கு கடும் கண்டனத்திற்குரியது.

ஊரக வளர்ச்சியின் அவசியத்தையும், ஊரக வளர்ச்சித் துறை ஊழியர்களின் நலனையும் கருத்தில் கொண்டு, போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அனைத்து சங்கங்களின் கூட்டமைப்பு நிர்வாகிகளை அழைத்துப் பேசி அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற தொண்டர்கள் உரிமை மீட்புக் கழகத்தின் சார்பில் முதல்வரைக் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## சென்னை உயர் நீதிமன்றத்தை சுற்றியுள்ள சாலைகளில் வியாபாரம் நடக்கவில்லை என்று உறுதி செய்ய உத்தரவு

சென்னை, டிச.22-

சென்னை உயர் நீதிமன்றத்தைச் சுற்றியுள்ள 4 சாலைகளிலும் வியாபாரம் நடைபெறவில்லை என்பதை உறுதி செய்யுமாறு மாநகராட்சி ஆணையருக்கு, உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மேலும், இந்த உத்தரவை அமல்படுத்தியது தொடர்பான அறிக்கையை ஜன. 7ம் தேதி தாக்கல் செய்யுமாறும் நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர். சென்னை என்எஸ்சி சாலை பகுதியில் உள்ள சாலையோரக் கடைகளை அகற்றி,சாலையை முறைப்படுத்துவது தொடர்பான வழக்கு விசாரணை நீதிபதிகள் ஆர்.சுரேஷ்குமார், ஏ.டி.ஜெகதீஷ் சந்திரா ஆகியோர் அடங்கிய அமர்வில் நடந்தது.

அப்போது, உயர் நீதிமன்றத்தைச் சுற்றியுள்ள என்எஸ்சி போஸ் சாலை உள்ளிட்ட 4 சாலைகளையும் ஆக்கிரமித்து கடைகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், இதனால் வழக்கறிஞர்கள், பொதுமக்களின் வாகனப் போக்குவரத்துக்கு கடும் இடையூறு ஏற்படுவதாகவும் நீதிபதிகளிடம் தெரிவிக்கப்பட்டது.

அதையடுத்து நீதிபதிகள்,”உயர் நீதிமன்றம் எதிரேயுள்ள என்எஸ்சி போஸ் சாலையில் சாலையோர வியாபாரிகளை அனுமதிக்கக் கூடாது என ஏற்கெனவே உயர் நீதிமன்றம் எச்சரித்தும், அதிகாரிகள் எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. எனவே, அப்பகுதியில் சாலையோர வியாபாரம் நடை பெறவில்லை என்பதை மாநகராட்சி அதிகாரிகள் உறுதி செய்து, அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்.

அதைக் கண்காணிக்க சிறப்புக் குழுவை அமைக்க வேண்டும். அதேபோல, சென்னை உயர் நீதிமன்றத்தைச் சுற்றிலும் உள்ள பிற சாலைகளிலும் உள்ள சாலையோர ஆக்கிரமிப்புகளை அகற்ற மாநகராட்சி மற்றும் காவல் துறை அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், இந்த 4 சாலைகளிலும் வியாபாரம் செய்யக்கூடாது என்று அறிவித்து, நடைபாதை மற்றும் போக்குவரத்தை சீரமைக்க வேண்டும்“ என்று உத்தரவிட்டு, விசாரணையை ஜன. 7ம் தேதிக்கு தள்ளிவைத்தனர்.

மேலும், இந்த உத்தரவை அமல்படுத்தியது தொடர்பான அறிக்கையை ஜன. 7ம் தேதி தாக்கல் செய்யுமாறு மாநகராட்சி ஆணையருக்கு நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.



## சென்னை : மாநில கணக்காயரை கண்டித்து தொழிற்கல்வி ஆசிரியர்கள் உண்ணாவிரதம்

சென்னை, டிச.22-

தமிழ்நாடு மாநில கணக்காயரின் நடவடிக்கையை கண்டித்து சென்னையில் தொழிற்கல்வி ஆசிரியர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஓய்வுபெறும் தொழிற்கல்வி ஆசிரியர்களுக்கான தர ஊதியம் தொடர்பான விவகாரத்தில் தமிழ்நாடு மாநில கணக்காயரின் நடவடிக்கையை கண்டித்து தமிழ்நாடு மேல்நிலைப் பள்ளி முதுகலை வணிகவியல் தொழிற்கல்வி ஆசிரியர்கள் சங்கம் சார்பில் சென்னை எழும்பூர் ராஜரத்தினம் ஸ்டேடியம் அருகே நேற்று உண்ணாவிரத போராட்டம் நடைபெற்றது.

மாநிலத் தலைவர் எம்.ராஜாராம் தலைமை வகித்தார். மாநில பொதுச் செயலாளர் வி.கிருஷ்ணன், ஒருங்கிணைப்பாளர் ஆர்.நெடுஞ்செழியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழ்நாடு மேல்நிலைப் பள்ளி தொழிற்கல்வி ஆசிரியர் கழகத்தின் மாநிலத் தலைவர் செ.நா. ஜனார் த்தனன், முன்னாள் பொதுச் செயலாளர் எஸ்.தட்சிணாமூர்த்தி, அமைப்புச் செயலாளர் சோ.சம்பத் உள்ளிட்டோர் கோரிக்கைகளை வலியுறுத்திப் பேசினர்.

‘தொழிற்கல்வி ஆசிரியர்கள் பெற்றுவந்த ரூ.5,400 தர ஊதியத்தை, ஓய்வுபெறும்போது ரூ.4,800 ஆக குறைத்து 12 ஆண்டுகள் கழித்து மாநில கணக்காயர் உத்தரவிட்டுள்ளார். இது அரசாணை எண் 306க்கு எதிரானது. எனவே, இந்த உத்தரவை திரும்பப் பெற வேண்டும். கடந்த 2001 ஜனவரி 1ம் தேதிக்கு முன்னர் தேர்வு நிலை பெற்ற மேல்நிலைப் பள்ளி தொழிற்கல்வி ஆசிரியர்கள் அனைவரும் தொடர்ந்து ரூ.5,400 தர ஊதியம் பெறும் வகையில் மாநில கணக்காயர் அலுவலகத்துக்கு தமிழக அரசு உடனடியாக தகவல் அனுப்ப வேண்டும்’ என்று போராட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

## தொகுப்பூதியத்தை ரூ.5000 ஆக உயர்த்தக் கோரி ஆர்சிஎச் தூய்மை பணியாளர்கள் போராட்டம்

சென்னை, டிச.22-

மாத தொகுப்பூதியம் 1500லிருந்து ரூ.5000 ஆக உயர்த்தி வழங்கப்படும் என்ற தமிழ்நாடு அரசின் அறிவிப்பை உடனடியாக நடைமுறைப்படுத்த வலியுறுத்தி தூய்மைப் பணியாளர்கள் சென்னையில் உண்ணாநிலை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது குறித்து தமிழ்நாடு அரசு ஆரம்ப சுகாதார நிலைய ஆர்.சி.எச் தூய்மைப் பணியாளர்கள் நலச் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஏ.ஆர். சாந்தி வெளியிட்டுள்ள அறிக்கை: கடந்த ஏப்ரல் 2025ல் நடைபெற்ற சட்டமன்ற கூட்டத் தொடரில், அமைச்சர் மா.சுப்ரமணியன் ஆரம்ப சுகாதார நிலைய ஆர்.சி.எச் (RCH) தூய்மைப் பணியாளர்களின் மாத தொகுப்பூதியத்தை ரூபாய் 1500 லிருந்து ரூ 5000 ஆக உயர்த்தப்படும் என அறிவித்தார். அதற்கு நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். ஆனால், அந்த அறிவிப்பு இதுவரை நடைமுறைபடுத்தப்படவில்லை. அதற்கான அரசாணையை உடனடியாக வெளியிட்டு, 2025 ஏப்ரல் மாதம் முதல், மாதத் தொகுப்பூதியம் ரூபாய் 5000 வழங்கிட வேண்டும்.

பல்நோக்கு மருத்துவமனைப் பணியாளர்களாக (MPHW) தகுதிப் பெற்று, காத்திருப்புப் பட்டியலில் உள்ள 500 க்கும் மேற்பட்ட ஆர்.சி.எச் தூய்மை பணியார்களை விரைவில் பல்நோக்கு மருத்துவமனைப் பணியாளர்களாக, பணி நியமனம் செய்ய வேண்டும். பல்நோக்கு மருத்துவமனைப் பணியாளர்களாக, பணி பெற தகுதியற்றவர்களாக 736 ஆர்.சி.எச் தூய்மை பணியாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர். இது வருத்தமளிக்கிறது. அவர்களது நீண்ட கால பணியை கருத்தில் கொள்ள வேண்டும். அனைவருக்கும் மீண்டும் ஒரு முறை வாய்ப்பு வழங்கி, பரிசீலனை செய்து முடிந்த வரையில் அவர்களுக்கும் பல்நோக்கு மருத்துவமனை பணியாளர்களாக பணி வழங்கிட வேண்டும்.

மாநிலத்தில் இருக்கின்ற காலி இடங்களை காண்பித்து, கலந்தாய்வு நடத்தி பணி நியமனம் செய்ய வேண்டும். புதிதாக உருவாக்கப்பட்டுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள பல்நோக்கு மருத்துவமனை பணியாளர் இடங்கள், பிற மருத்துவமனைகளில் உள்ள காலிப் பணியிடங்களை அறிவித்து, அவற்றை நிரப்பிட வேண்டும்.

அரசாணையில் அவர்களுக்கு எழுதப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டும் என்று தான் உள்ளதே தவிர கல்வி சான்றிதழ் வழங்க வேண்டும் என்றில்லை. எனவே எழுதப் படிக்கத் தெரிந்த ஆர்.சி.எச் தூய்மைப் பணியாளர்களுக்கு, அரசாணை விதிகளின் படி அனைவருக்கும் பல்நோக்கு மருத்துவமனை பணியாளர் (MPHW) வேலை வழங்கிட வேண்டும்.

அறுபது வயது நிரம்பிய ஆர்.சி.எச் தூய்மை பணியாளர்கள் 210 பேர் உள்ளனர். மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் உறுதி




அளித்தபடி, அவர்களுக்கு பணிக் கொடை அளித்து பணி ஓய்வு வழங்கவேண்டும். அல்லது 2017 ம் ஆண்டு முதல் வழங்கப்பட வேண்டிய ஊதிய நிலுவைத் தொகையையும் வழங்கி பணி ஓய்வு தரப்பட வேண்டும். தொடர்ந்து அவர்களிடம் குறைந்த ஊதியத்தில் வேலை வாங்குவதை தவிர்த்திட வேண்டும். இந்தக் குறைவான 1500 ரூபாய் தொகுப்பூதியத்தை கூட கள்ளகுறிச்சி, விழுப்புரம், திருவண்ணாமலை, சேலம், ஈரோடு, கடலூர், சிவகங்கை உள்ளிட்ட பல மாவட்டங்களில் மிகவும் கால தாமதமாகவே தொடர்ந்து நீண்டகாலமாக வழங்கப்படுகின்றது. இந்த ஊதிய பாக்கியை உடனடியாக வழங்க வேண்டும். தாமதமின்றி, மாதா மாதம் உரிய நேரத்தில் ஊதியம், ஊதிய பாக்கியை வழங்க வேண்டும்.

ஆர்.சி.எச்.தூய்மை பணியாளர்கள் / பல்நோக்கு மருத்துவமனை பணியாளர்களுக்கு ஈஎஸ்ஐ ( ESI) பி.எஃப் (PF) வழங்குவதோடு, ஊதியத்துடன் கூடிய வார விடுமுறை, தேசிய விடுமுறை வழங்கிட வேண்டும். ஊதியத்துடன் கூடிய மருத்துவ விடுப்பு, மகப்பேறு விடுப்பு , ஒரு நாள் காஷுவல் விடுப்பு வழங்கிட வேண்டும். எட்டு மணி நேரம் மட்டுமே வேலை வழங்கிட வேண்டும். பணியாளர் அடையாள அட்டை, இலவச சீருடை வழங்கிட வேண்டும்.

கரோனா ஊக்கத்தொகை வழங்கப்படாத, மீதமுள்ள 459 பேருக்கு, கரோனா ஊக்கத்தொகை தலா ரூபாய் 15,000 வழங்கிட வேண்டும். பணியின் போது உயிரிழந்த பணியாளர்களின் குடும்பங்களுக்கு குடும்ப நல நிதி வழங்க வேண்டும். பல்நோக்கு மருத்துவமனை பணியாளர்களுக்கு வெவ்வேறு மாவட்டங்களில், ஏற்றத்தாழ்வுடன் தினக்கூலியாக 350 ரூபாய் முதல் 700 ரூபாய் வரை வழங்கப்படுகிறது. இது தவிர்க்கப்பட்டு, சம வேலைக்கு சம ஊதியம் வழங்கிட வேண்டும். குறைந்த பட்ச ஊதியச் சட்டப்படி குறைந்த பட்ச ஊதியம் வழங்கிட வேண்டும்.

மாதம் 27 நாட்களே பணி வழங்கப்படுவதை மாற்றி 30 நாட்களும் பணிநாட்களாக அறிவித்து பணிவழங்கிட வேண்டும். பல்நோக்கு மருத்துவமனை பணியாளர்களில் பலர் தினமும் 2 முதல் 3 மணி நேரம் வெகு தூரம் பயணம் செய்து, அதிகப் பயணச் செலவு செய்து, நெடுந்தொலைவுகளில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணி புரிந்து வருகின்றனர். அவர்களின் இன்னல்களை போக்கும் வகையில், அவர்கள் விருப்பபடி மாவட்ட அளவில் பணி மாறுதல் வழங்க வேண்டும். கட்டாயமாக வழங்கப்பட்டுள்ள ( Deputation ) மாற்றுப்பணி ஆணையை ரத்து செய்ய வேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இன்று (21.12.2025 ஞாயிறு) சென்னை சிவானந்தா சாலையில், தமிழ்நாடு அரசு ஆரம்ப சுகாதார நிலைய ஆர்.சி.எச் ஒப்பந்த சுகாதார துப்புரவு பணியாளர்கள் நலச்சங்கம் சார்பில் உண்ணாநிலை அறப்போராட்டம் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை நடைபெற்றது.

இந்த உண்ணாநிலை அறப்போராட்டத்திற்கு, தமிழ்நாடு அரசு ஆரம்ப சுகாதார நிலைய ஆர்.சி.எச் ஒப்பந்த சுகாதார துப்புரவு பணியாளர்கள் நலச்சங்கத்தின் மாநிலத் தலைவர் என்.எஸ். செல்வராஜ் தலைமை தாங்கினார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்தத் தலைவர் இரா. முத்தரசன் உண்ணாநிலை போராட்டத்தை முடித்து வைத்து நிறைவு உரையாற்றினார்.



■ தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் சங்கத்தின் திருப்பூர் மாவட்ட அவிநாசி கிளை சார்பாக, வருகின்ற ஜனவரி 2026 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் தேதி மூன்றாம் ஆண்டு கலை இரவு நிகழ்ச்சி நடத்துவது சம்பந்தமாக கிளை தலைவர் ஈஸ்வரன் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் அவிநாசி ரோட்டில் உள்ள அம்மாபாளையத்தில் நடைபெற்றது. கலை இரவு நிகழ்ச்சி சிறப்பாக நடத்துவது சம்பந்தமாக பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில் திருப்பூர் மாவட்ட திருமுருகன் பூண்டி கிளை செயலாளர், பொருளாளர், கிளை செயற்குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் மது விற்று பணம் சம்பாதிக்கிறது திமுக அரசு: சவுமியா அன்புமணி

திருவள்ளூர், டிச.22-

திமுக அரசு தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் அதிகளவில் மதுபானங்களை விற்று பணம் சம்பாதித்து வருகிறது என பசுமைத்தாயகம் தலைவர் சவுமியா அன்புமணி குற்றம் சாட்டியுள்ளார்.

'சிங்கப் பெண்ணே எழுந்து வா' என்ற முழக்கத்தோடு தமிழக மகளிர் உரிமை மீட்புப் பயணம் என்ற பெயரில் பசுமைத் தாயகம் அமைப்பின் தலைவர் சவுமியா அன்புமணி தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறார்.

இன்று திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி அருகே ஆர்.கே.பேட்டையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற தமிழக மகளிர் உரிமை மீட்புப் பயண நிகழ்வில் சௌமியா அன்புமணி பேசியதாவது: ஆந்திர எல்லையையொட்டியுள்ள மாவட்டமான திருவள்ளூர் மாவட்டத்தில் அதிகளவில் கஞ்சா புழக்கத்தில் உள்ளது.

இளைஞர்களிடையே உள்ள போதை பழக்கத்தால் பொதட்டூர்பேட்டையில் இன்சூரன்ஸ் பணத்துக்காக இரு மகன்கள் தந்தையை பாம்பு கடிக்கச் செய்து கொன்றுள்ளனர். கும்மிடிப்பூண்டி அருகே ஆரம்பாக்கத்தில் சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டுள்ளார்.

தாங்கள் ஆட்சிக்கு வந்தால், நெசவாளர்கள், விவசாயிகள் அதிகம் வசிக்கும் திருத்தணி பகுதியில், நெசவு பூங்கா அமைக்கப்படும், நறுமணப் பொருட்கள் தயாரிக்கும் ஆலை அமைக்கப்படும் என, திமுக வாக்குறுதி அளித்தது. அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் மதுபானங்களை அதிகளவில் விற்று பணம் சம்பாதித்து வருகிறது திமுக அரசு.

திருத்தணி அரசு மருத்துவமனை மாவட்ட தலைமை மருத்துவமனையாக பெயரளவில் தரம் உயர்த்தப்பட்டுள்ளதால் மருத்துவர்கள் பற்றாக்குறை உள்ளது. ஆனால், மக்கள் கேட்காமலேயே 108 ஆம்புலன்ஸ் திட்டம் உள்ளிட்ட திட்டங்களை கொண்டு வந்தவர் அன்புமணி. ஆகவே, அன்புமணியை தேர்தலில் வெற்றி பெற செய்தால் நிறைய வளர்ச்சி திட்டங்களை செயல்படுத்துவார்.

பெண்கள் உள்ளாட்சி நிர்வாக பதவிகளுக்கு அதிக அளவில் போட்டியிட்டு வெற்றி பெற்று தங்கள் பகுதிக்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.



# சென்னை பெசன்ட் நகர் கடற்கரையில் உணவுத் திருவிழா 235 வகை உணவும் சிறப்பு அம்சங்களும்

சென்னை, டிச.22-

ஆம்பூர் பிரியாணி முதல் நீலகிரி ராகி களி வரை 235 வகையான உணவுகளுடன் கூடிய பிரமாண்ட உணவுத் திருவிழா பெசன்ட் நகர் கடற்கரையில் இன்று (டிச.21) தொடங்குகிறது. இதை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில், மகளிர் குழுவினரின் சமையல் திறமையையும், தரமான தயாரிப்புகளையும் வெளிப்படுத்தும் வகையில் பெசன்ட் நகரில் இன்று (டிச.21) முதல் 24ம் தேதி வரை 4 நாள் உணவுத் திருவிழாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த உணவுத் திருவிழாவை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்.

இதில் 38 மாவட்டங்களைச் சேர்ந்த பாரம்பரிய சுவைமிக்க உணவுகளான ஆம்பூர் மற்றும் திண்டுக்கல் பிரியாணி, கொங்கு மட்டன் பிரியாணி, விருதுநகர் புரோட்டா, கடலூர் மீன் புட்டு, கருவாடு சூப், அரியலூர் தோசை, மயிலாடுதுறை இறால் வடை, சேலம் தட்டு வடை, காஞ்சிபுரம் கோயில் இட்லி, நீலகிரி ராகி களி, தூத்துக்குடியின் யாழ் உணவுகள் உள்ளிட்ட 235க்கும் மேற்பட்ட உணவு வகைகள் இடம்பெறுகின்றன. இதற்காக 38 பிரத்யேக உணவு அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

இது தவிர அடுப்பில்லா முறையில் தயாரித்த உணவுகள், பனை பொருட்கள், 90ம் ஆண்டு காலகட்ட நினைவுகளைத் தூண்டும் தின்பண்ட வகைகள், செட்டிநாடு பலகாரங்கள் போன்றவற்றை விற்பனை செய்ய ஏதுவாக 12 சிறப்பு அரங்ககுகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. தொடக்க நாளான இன்று மாலை 4 மணி முதல் இரவு 9 மணி வரையிலும், நாளை முதல் 24ம் தேதி வரை மதியம் 12 மணி முதல் இரவு 9 மணி வரையும் உணவுத் திருவிழா நடைபெறும்.

கலைநிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு: இந்நிகழ்வில் உணவு விற்பனை மட்டுமின்றி, மாலை நேரங்களில் பொதுமக்களைக் கவரும் வகையில் கலை நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் மகளிர் குழுவினருக்கு விற்பனை நுணுக்கங்கள் மற்றும் சுகாதாரம் குறித்த பயிற்சிகளும் வழங்கப்பட உள்ளன.

# தமிழக காவல்துறை அரசின் சூழ்நிலை கைதியாக இருக்கிறது - பொன் மாணிக்கவேல்

மதுரை, டிச.22-

தமிழக காவல்துறை அரசின் சூழல்நிலை கைதியாக இருக்கிறது என்று பூர்ணசந்திரன் குடும்பத்திற்கு ஆறுதல் கூறிய ஓய்வுபெற்ற ஐஜி பொன் மாணிக்கவேல் தெரிவித்துள்ளார்.

மதுரையில் திருப்பரங்குன்றம் மலையில் உள்ள தூணில் தீபம் ஏற்ற வலியுறுத்தி ஆடியோ ஒன்றை வெளியிட்டு பூர்ணச்சந்திரன் என்பவர் 2 நாளுக்கு முன்பு தீக்குளித்து தற்கொலை செய்துகொண்டார். பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் மற்றும் இந்து அமைப்பினர் அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

இந்நிலையில் முன்னாள் காவல்துறை ஐஜி பொன்மாணிக்கவேல் பூர்ணச்சந்திரன் வீட்டுக்குச் சென்று அவரது மனைவி, பெற்றோரை நேரில் சந்தித்து நேற்று ஆறுதல் கூறினார். அப்போது அவர் செய்தியாளர்களிடம் கூறியது: இச்சம்பவம் நடந்தபோது, மதுரையில் தான் இருந்தேன். உடனே நான் வரவில்லை. ஆடியோ தகவல்களை சேகரித்து விசாரித்துவிட்டு வந்தேன்.

கொலை என்பது ஒருவர் மற்றொருவரை கொல்வது. இது எளிதில் செய்திடலாம். தற்கொலை சாதாரணமல்ல. இதற்கெல்லாம் தற்கொலை செய்யலாமா என கேட்பர், அறிவுரை கூறுவர். நான் அவர்களுக்கு பதிலளிக்க விரும்பவில்லை. எனது நோக்கம் பூர்ணச்சந்திரன் குழந்தைகளின் எதிர்காலத்தை பார்க்கவேண்டும். அவரது ஆடியோவில் தற்போதைய அரசு, நீதிபதி பெயர், எதற்காக தற்கொலை, பெற்றோர், மனைவி, குழந்தைகளிடம் மன்னிப்பு கேட்கிறார். என்ன காரணமென தெளிவாக சொல்கிறார். தற்கொலைக்கு யார் காரணம். தூண்டுதல் யார் என்ற கேள்வி எழுகிறது.

தமிழகத்தின் தலைவராக (முதல்வர்) இருப்பவர் மு.க. ஸ்டாலின். பூர்ணச்சந்திரன் இறக்கும்போது, திமுகக்காரர்கள் என, கூறுகிறார். திமுகவில் யார் இறந்தாலும் யாரும் வரமாட்டார்கள் என்பதற்கு இதுவே எடுத்துக்காட்டு. பொது நலன் கருதி அவர் உயிரிழந்துள்ளார். திமுகக்காரர்கள் எவ்வளவு பெரிய நன்றி கெட்டவர்கள் என தெரிகிறது. நான் எந்த கட்சியை சேர்ந்தவனும் அல்ல. எங்களது தெருவில் நல்ல வேலை செய்வோருக்கு ஒட்டுப் போடுவேன்.

தேர்தல் பக்கம் வரக் கூடாது என நினைத்தேன். இந்த விஷயத்தில் ஸ்டாலினை தோற்கடிக்க கடுமையாக பிரச்சாரம் செய்வேன். பூர்ணச்சந்திரன் உயிரிழப்புக்கு களங்கம் கற்பிப்போர் கீழத்தரமான பிறவிகள். இங்கு வந்தால் எனக்கு புகழ் என



நினைத்து வரவில்லை. உலகத்திலுள்ள இந்துக்கள் என்னை நம்புங்கள். சாதாரணமாக அவர் உயிரிழக்கவில்லை. இரு குழந்தைகளை தெருவில் விட்டுச் சென்றுள்ளார். பணத்திற்காக அல்ல அவரது தற்கொலை.

அப்படி யாரும் கூறினால் அவர்களை தற்கொலை செய்ய சொல்லுங்கள். எனது சொத்துக்களை விற்று பணம் தருகிறேன். பூர்ணச்சந்திரன் காரியத்திற்கு மீண்டும் வந்து அஞ்சலி செலுத்துவேன். தமிழகம் மட்டுமின்றி உலகிலுள்ள இந்துக்களும் வீட்டுக்கு வந்து அஞ்சலி செலுத்தவேண்டும். வீட்டிலேயே முருகன் படத்தை வைத்து அஞ்சலி செலுத்தலாம்.

1947க்கு பிறகு தீபம் ஏற்றுவதற்காக யாரும் உயிரிழக்கவில்லை. இதுவே முதல் முறை. இரு குழந்தைகளுக்காக அரசிடம் பிச்சை எடுக்கக்கூடாது. ஒவ்வொரு ஆண்டும் அரசுக்கு நாம் ரூ. 4.40 லட்சம் கோடி கொடுக்கிறோம். திமுக குடும்பத்தில் இருந்து ஒருவரும் இங்கு வந்து ஆறுதல் கூறவில்லை. அவரது தற்கொலைக்கு வேறு நோக்கம் இல்லை. ஆன்மீகம் மட்டுமே. இந்த நபர் 9 பேருடன் சேர்ந்து குடித்துவிட்டு உயிரிழந்து இருந்தால் விமானத்தில் சென்று மு.க. ஸ்டாலின் தலா ரூ. 10 லட்சம் வழங்கி இருப்பார்.

ஒருவரை கைது செய்ய செல்லும் போலீஸ் அதிகாரி பாதுகாப்புக்காக துப்பாக்கி கொண்டு செல்லவேண்டும். அப்படி ஒரு போலீஸ் அதிகாரி செல்லாமல் குத்துப்பட்டு உயிரிழந்ததற்கு முன்னாள் முதல்வர் எடப்பாடி ரூ.1 கோடி நிதி வழங்கினார். ஓட்டு வங்கியை தான் அரசியல்வாதிகள் பார்க்கின்றனர். இனிமேல் மதுரைக்கு வந்தால் இங்கு வந்துவிட்டு தான் செல்வேன். பூர்ணசந்திரன் ஆடியோவில் ஜி.ஆர். சுவாமிநாதன் பற்றி கூறுகிறார். நீதிபதியின் நேர்மைக்கு 10 ஆயிரம் கையெழுத்து போடுவேன்.

எனக்கு எதிராக வாதாடியவர் ஜிஆர்எஸ். முருகனின் அடிமை தற்கொலை செய்துள்ளான். இதற்காக மக்கள் கொத்து கொத்தாக மதுரைக்கு வந்து அஞ்சலி செலுத்தவேண்டும். இறைவனுக்காக அவர் தற்கொலை செய்ததற்கு காரணம் அரசு தான் என, அவரது ஆடியோவிலும் சொல்லி இருக்கிறார். கள்ளச்சாராயத்தில் உயிரிழந்தால் ஓடிச் சென்று நிவாரணம் கொடுக்கிறீர்கள்.

திமுகக்காரன் என, சொன்னாலும் யாரும் வரவில்லை. இரு குழந்தைகளுக்கு எதிர்கால கல்விக்கு அரசிடம் பிச்சை எடுக்காமல் இருக்க, முழு நிதி சேகரிக்க முயற்சிப்பேன். அரசிடமல்ல வெளிநாட்டு இந்துக்கள் மூலமும் நிதியை திரட்டி குழந்தைகளின் பெயரில் டெபாசிட் செய்ய முயற்சி எடுப்பேன்.

தமிழகத்திலுள்ள காவல்துறையில், அதிமுக காவல்துறை, திமுக காவல்துறை என பிரிந்து கிடக்கிறது. காவல்துறையினர் பிறவியில் நல்லவர்கள். அரசின் சூழல்நிலை கைதிகளாக இருக்கின்றனர். மாநகர ஆணையர் பற்றி எதுவும் சொல்லக்கூடாது. அவர் பாவம். நான் ஆணையராக இருந்திருந்தால் உத்தரவை 100 சதவீதம் நிறைவேற்றி இருப்பேன். சட்டத்திற்கு எதிராக, புறம்பாக இருக்கும் வரையிலும் நான் அரசு ஊழியர் அல்ல. அரசு ஊழியன் சட்டத்தின்படி நடக்கவேண்டும்.

நீதிமன்ற உத்தரவை மதிக்காதவர்கள் போலீஸ் அல்ல. ஒரு அரசு என்பது 50 சதவீதம் சட்டபடியும், சட்டத்திற்கு விரோதமாகவும் இருக்கும். அமைச்சர்கள் மூலம் 25 சதவீத பணத்தை வீட்டில் வந்து கொடுக்கச் செய்வர். இது எல்லா அரசிலும் உண்டு. இவ்வாறு அவர் கூறினார்.



■ மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் நாகம்மாள்கோவில் தெருவில் அமைந்துள்ள ஸ்ரீ நாகம்மாள் சுவாமிக்கு மார்கழி மாத உற்சவ விழா அம்மாவாசை வெள்ளிக்கிழமை அன்று சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. விழாவில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு பூஜை பொருட்களும் அன்னதானமும் வழங்கப்பட்டது



■ திருப்பரங்குன்றம் தீபத்தூணில் தீபம் ஏற்றாத திமுக அரசை கண்டித்து திருநெல்வேலிக்கு வரும் தமிழக முதல்வரை கண்டித்து கருப்புகொடி ஆர்ப்பாட்டத்திற்கு கிளம்பிய போது திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி ஒன்றிய இந்து முண்ணனி செயலாளர். இட்டமொழிபுதூரைச் சேர்ந்த பெ.ஆர்தன் வீட்டு சிறையில் கைது.

# விவசாய மின் இணைப்புக்கு விண்ணப்பிக்க கால அவகாசம் வழங்க வேண்டும்: ஜி.கே. வாசன்

சென்னை, டிச.22-

மின் இணைப்பு வேண்டி காத்திருக்கும் விவசாயிகளுக்கு தட்கல் திட்டத்தில் இணைப்பு வழங்க விண்ணப்பிக்க மேலும் கால அவகாசத்தை தமிழக அரசு வழங்க வேண்டும் என தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே வாசன் எம்.பி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழக அரசு கடந்த 16.12.2025 அன்று தமிழகத்தில் இலவச மின்சாரம் வேண்டி காத்திருப்போர் பட்டியலில் இருக்கும் விவசாயிகள் தட்கல் திட்டத்தில் இணைப்பு வேண்டுமானால் விண்ணப்பிக்கலாம் என்று அறிவிப்பு வெளியிட்டது.

இந்த திட்டத்தில் விவசாயிகளுக்கு 10 ஆயிரம் மின் இணைப்பு வழங்கப்படும் என்று காலக்கெடு எதுவும்



குறிப்பிடாமல் அறிவித்து இருந்தது. ஆனால் அறிவிப்பு வெளியான இரண்டு தினங்களில் அதாவது 18.12.2025 மதியம் 2 மணியுடன் இத்திட்டம் நிறைவுப் பெற்றுவிட்டதாக விண்ணப்பம் பெறுவதை நிறுத்திவிட்டார்கள்.

பல லட்சம் விவசாயிகள் மின் இணைப்பு வேண்டி காத்திருப்போர் பட்டியலில் இருக்கும் போது 10 ஆயிரம் விவசாயிகளுக்கு மட்டும் மின் இணைப்பு வழங்குவதாக அறிவித்துவிட்டு எந்த முன்னறிவிப்பு எதுவும் இல்லாமல் இத்திட்டத்தை தமிழக அரசு கைவிட்டது நம்பிக்கையோடு காத்திருந்த விவசாயிகளை வஞ்சிக்கும் செயலாகும்.

தமிழக விவசாயிகள் பல்வேறு இயற்கை இடர்பாடுகளுக்கு இடையில் நஷ்டம் ஏற்பட்டாலும் தொடர்ந்து விவசாயம் செய்து கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் வாழ்வாதாரம் காக்கும் வகையில் இத்திட்டத்தில் விண்ணப்பிக்க மேலும் கால அவகாசம் அளிக்க வேண்டும். அதோடு குறைந்த பட்சம் 50 ஆயிரம் விவசாயிகளுக்காவது இத்திட்டத்தின் மூலம் மின் இணைப்பு வழங்க வேண்டும் என்று தமிழக அரசை தமிழ் மாநில காங்கிரஸ் (மூ) சார்பாக கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இடைநிலை ஆசிரியர்கள் கோரிக்கைகளை அரசு உடனே நிறைவேற்ற வேண்டும் பிரேமலதா விஜயகாந்த்

சென்னை, டிச.22-

இடைநிலை ஆசிரியர்களின் கோரிக்கைகளை தமிழக அரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என பிரேமலதா விஜயகாந்த் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் தனது அறிக்கையில், "தமிழகத்தில் இடைநிலை ஆசிரியர்கள் கல்வித் துறையில் மிகப்பெரிய பங்களிப்பை அளித்து வருகின்றனர். இவர்கள் தங்கள் பணிகளுக்கு முறையான ஊதியம் மற்றும் சலுகைகளை எதிர்பார்த்து, பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வந்துள்ளார்கள். இடைநிலை ஆசிரியர்கள் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களாக இருந்தாலும், அவர்கள் தங்கள் பணி மற்றும் தகுதிக்கு ஏற்ப ஊதியம் பெறவில்லை.

அவர்களுக்கு சம வேலைக்கு சம ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்பது அவர்களின் முக்கிய கோரிக்கையாக உள்ளது. இது தொழிலாளர் உரிமைகளுக்கு அடிப்படை



கொள்கை என்பதால், இந்த கோரிக்கையை உடனடியாக நிறைவேற்ற வேண்டும்.

பழைய ஓய்வூதிய திட்டத்தை உடனே மீட்டெடுத்து, பணியில் இருந்தவர்களுக்கு உரிய ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும், ஊதிய முரண்பாடுகளை உடனடியாக சரிசெய்து, அவர்கள் கடமைகளுக்கு ஏற்ற முறையான ஊதிய கணக்கீடு செய்யப்பட்டு வழங்க வேண்டும். இடைநிலை ஆசிரியர்களுக்கான உயர்கல்வி ஊக்க ஊதிய உயர்வு வழங்குவதற்கு முன் இருந்த நடைமுறையை மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

இடைநிலை ஆசிரியர்களின் பணியிடங்கள் உடனடியாக நிரப்பப்பட வேண்டும். எனவே திமுக அரசு, அதன் தேர்தல் வாக்குறுதிகளின் அடிப்படையில், இடைநிலை ஆசிரியர்களின் கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்ற வேண்டும். ஆசிரியர்களின் பணி மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த தேவையான நடவடிக்கைகளை தமிழக அரசு எடுக்க வேண்டும்.

நிறுத்தப்பட்ட உயர்கல்வி ஊக்க ஊதிய உயர்வு, பழைய ஓய்வூதிய திட்டம், மற்றும் சம வேலைக்கு சம ஊதியம் போன்ற கோரிக்கைகள் உடனடியாக இந்த தமிழக அரசு நிறைவேற்ற வேண்டும் என்று தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம். காலி இடைநிலை வலியுறுத்தி கேட்டு கொள்கிறேன்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000